# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 20 மடல் 3

மார்ச் 2020

₹1.00

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநிலத்தின் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், 01.11.2019 நாளிட்ட கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் (காப – 6) துறையின் அரசாணை எம்எஸ் எண் 155 மூலம் ரூபாய் 82.13 கோடி மதிப்பில், ‘‘கால்நடை மற்றும் விலங்கின அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான உயர் நிலையம்’’ நிறுவுவதற்கு முன்மொழியப்பட்ட இடமான சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டுச் சாலைப் பகுதியில் மாநிலத்தின் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் சேலம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்காக 09.02.2020அன்று நடைபெற்ற பூமி பூஜை மற்றும் அடிக்கல் நாட்டு விழாவில் பங்கேற்று, மூன்று நாள் விவசாயப் பெருவிழாவைத் துவக்கிவைத்தார். மேலும், விவசாயிகளுக்கு இடுபொருட்களையும் அரசின் பல்வேறு திட்டப் பயனாளிகளுக்கு நல உதவிகளையும் வழங்கி, கால்நடை வளர்ப்பு மற்றும் வேளாண்மை சார்ந்த முன்னோடி விவசாயிகளுக்குப் பரிசுகள் வழங்கினார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான உயர் நிலைய இலச்சினை வெளியிட, இலச்சினையை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பெற்றுக்கொண்டார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய தமது தலைமையுரையில் ஊரகப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான கால்நடையின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கிவைத்த விலையில்லாக் கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டம் மாநிலத்தின் வெண்மைப் புரட்சிக்குப் பாதை அமைத்ததோடு ஏழைகளின் வாழ்வை வளப்படுத்தியுள்ளது என்று சுட்டிக்காட்டி, திட்டத்தால் பயன்பெற்ற சில பயனாளிகளின் பெயர்களைப் பட்டியலிட்டார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தானும் ஒரு விவசாயியாக இருப்பதால் விவசாயிகள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சனைகளையும் உணர்ந்திருப்பதாகவும், விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கவனத்தில் கொண்டு தற்போதைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்றார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். அவர் ஆற்றிய தமது உரையில் கிராமப்புறப் பொருளாதாரத்தை அதிகப்படுத்தும் வகையில் குறிப்பாகக் கிராமப்புற மகளிரின் வாழ்வை

மேம்படுத்தக் கால்நடை வளர்ப்பை முன்னெடுக்கும் தொலைநோக்குப் பார்வையுடன் விலையில்லாக் கறவைப் பசுக்கள், ஆடுகள் வழங்கும் திட்டத்தை மறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் நடைமுறைப்படுத்தினார் என்றார்.

மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் விழாவில் பங்கேற்றார். அவர் ஆற்றிய தமது உரையில் தமிழ்நாடு அரசு கால்நடை மருத்துவ அறிவியலில் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளைச் செய்திருக்கிறது என்றும் தற்போதைய அரசு விவசாயிகளின் மேம்பாட்டிற்காகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலர் திரு. க. சண்முகம் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையின் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி இ.ஆ.ப. அவர்கள் விவசாயப் பெருவிழா பற்றிய விளக்கவுரை வழங்கினார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலர் மருத்துவர் கே. கோபால் இ.ஆ.ப. அவர்கள் கால்நடை மற்றும் விலங்கின அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான உயர் நிலையத் திட்ட விளக்கவுரை ஆற்றினார். சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. சி.அ. ராமன் இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

மாண்புமிகு தமிழக அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன், கால்நடை மற்றும் விலங்கின அறிவியலில் ஒருங்கிணைந்த ஆராய்ச்சிக்கான உயர் நிலையச் சிறப்பு அதிகாரி முனைவர் இரா. பிரபாகரன், பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ், சேலம், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையச் சிறப்பு அதிகாரி மற்றும் முதல்வர் (பொ.) முனைவர் ஏ. இளங்கோ, அரசு அதிகாரிகள், பல்கலைக்கழக அதிகாரிகள், 50,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், ஆவின், கால்நடைப் பராமரிப்புத் துறை, வேளாண்மைத் துறை, மீன்வளத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, பிற முக்கியத் துறைகள் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த 225 அரங்குகள் இடம்பெற்ற கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கிவைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் மற்றும் பிற அமைச்சர் பெருமக்கள் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் காட்சிப்படுத்தியிருந்த நாட்டினக் கால்நடை இனங்கள், பல்கலைக்கழகச் சாதனைகள், கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்க மற்றும் சிகிச்சையியல் செயல்பாடுகள் குறித்த அரங்குகளைப் பார்வையிட்டனர். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பல்கலைக்கழகச் செயல்பாடுகளை விரிவாக எடுத்துரைத்தார்.

மூன்று நாள் விவசாயப் பெருவிழாவில் வல்லுநர்களின் விரிவுரைகளும் செயல்முறை விளக்கங்களும் இடம்பெற்றன. மேலும், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி; திருநெல்வேலி, நாமக்கல் மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள்; கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்கள் பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நடத்தினர்.




மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் 11.02.2020 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில் பங்கேற்று, விழா ஒருங்கிணைப்பாளர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி, ஆற்றிய தமது நிறைவுரையில் இந்தக் கல்வியாண்டிலிருந்து புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி செயல்படத் துவங்கும் என்று குறிப்பிட்டு, விழாவை வெற்றிகரமாக நடத்திய அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும் நன்றி தெரிவித்தார். மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள் விழாவில் பங்கேற்று உரையாற்றினார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலர் மருத்துவர் கே. கோபால் இ.ஆ.ப. அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. ஆர். இளங்கோவன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக, சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. சி.அ. ராமன், இ.ஆ.ப அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவைகள் துறை இயக்குநர் திரு. ஏ. ஞானசேகரன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் உட்பட ஏறக்குறைய ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் விவசாயக் கண்காட்சியைக் கண்டுகளித்தனர்.

## தேசியக் கருத்தரங்கு



20ஆவது இந்தியக் கால்நடை மருத்துவ மாநாடு, இந்தியக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டுச் சங்கத்தின் 27ஆவது ஆண்டு கருத்தரங்கு, "கால்நடை நலம், உற்பத்தி மற்றும் உணவுப் பாதுகாப்பில் பரிமாற்றத்திற்கான கால்நடை மருத்துவ ஆராய்ச்சி முன்னுரிமைகள்" எனும் தேசியக் கருத்தரங்கு ஆகியவை சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 21.02.2020 மற்றும் 22.02.2020 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டன. திருப்பதி, ஸ்ரீவெங்கடேஸ்வரா கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஒய். ஹரி பாபு அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு 21.02.2020அன்று தேசியக் கருத்தரங்கைத் துவக்கிவைத்து, கருத்தரங்க மலர் வெளியிட்டு உரையாற்றினார். துவக்க விழாவிற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். குஜராத், காமதேனு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் என்.எச். கேலாவாலா, கேரளக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எம்.ஆர். சசீந்திரநாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் வி. ஞானப்பிரகாசம் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். இந்தியக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டுச் சங்கத் தலைவர் முனைவர் எஸ்.என். சிங் மற்றும் நிறுவனச் செயலர் முனைவர் ரிஷேந்தர வர்மா ஆகியோர் முறையே சங்கத் தலைவர் உரை மற்றும் சங்க அறிக்கை வழங்கினர். கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கருத்தரங்கச் செயலாளர் முனைவர் ஏ. தங்கவேலு அவர்கள் நன்றி கூறினார். இந்தியக் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி மேம்பாட்டுச் சங்கத்தின் சார்பில் சிறந்த கால்நடை மருத்துவர்கள் மற்றும் அறிவியல் அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. பல்வேறு மாநிலங்களிலிருந்து மொத்தம் 143 கால்நடை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். 22.02.2020அன்று பண்ணையாளர்–அறிவியல் அறிஞர் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. கருத்தரங்கின் நிறைவு விழாவிற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் தலைமை வகித்தார். புதுதில்லி, இராணுவக் குதிரைப் படைப் பிரிவின் கால்நடை மருத்துவப் பணிகளின் தலைமை இயக்குநர் மற்றும் கலோனல் கமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் பி.ஆர். வெங்கடேஷ் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ் வழங்கி உரையாற்றினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. சரத்சந்திரா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் நன்றி கூறினார்.

## கால்நடைப் பேரிடர் மேலாண்மை குறித்த பயிற்றுநர் பயிற்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை விரிவாக்கக் கல்வித் துறையில் செயல்படும் கால்நடைப் பேரிடர் அவசர மீட்புக் குழுவும் புதுதில்லி, உலகக் கால்நடைப் பாதுகாப்பு அமைப்பும் தமிழ்நாடு பேரிடர் இழப்புக் குறைப்பு நிறுவனமும் இணைந்து பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்குக் "கால்நடைப் பேரிடர் மேலாண்மை" குறித்த பயிற்றுநர் பயிற்சியை 04.02.2020 முதல் 06.02.2020 வரை நடத்தின. அவ்வமயம் மூன்று கால்நடை அவசர மீட்புப் பிரிவுகளும் நாமக்கல், ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் 04.02.2020அன்று நிறுவப்பட்டன. தமிழ்நாடு அரசின் வருவாய் நிர்வாக ஆணையர் / முதன்மைச் செயலர் மருத்துவர் ஜெ. இராதாகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, புதிதாக நிறுவப்பட்ட



கால்நடை அவசரப் பாதுகாப்புப் பிரிவிற்கான கால்நடை முதலுதவிப் பெட்டியைப் வழங்கி, மாநிலப் பேரிடர் மேலாண்மை – நிலையான இயக்க நடைமுறை என்ற புத்தகத்தை வெளியிட்டுப் பயிற்சியைத் துவக்கிவைத்து உரையாற்றினார். புதுதில்லி, தேசியப் பேரிடர் மேலாண்மை நிறுவன முன்னாள் உறுப்பினர் திரு. கே.எம். சிங் இ.கா.ப. அவர்கள் கால்நடைப் பேரிடர் மேலாண்மை பற்றிய பயிற்சிக் கையேடு வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். அவர் தமது உரையில் தமிழ்நாடு பேரிடர் இழப்புக் குறைப்பில் முதன்மையான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் (பொ.) முனைவர் செசிலியா ஜோசப், விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கால்நடை விரிவாக்கக் கல்வித் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பா. குமாரவேல் அவர்கள் வரவேற்புரை ஆற்றி, திட்ட முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். மேலும், அரக்கோணம், தேசியப் பேரிடர் மேலாண்மைப் படையினர் பயிற்சியில் பங்கேற்று, பேரிடர் காலங்களில் பயன்படும் கருவிகள் பற்றிய கண்காட்சி அமைத்துப் பயனாளிகளுக்குச் செயல் விளக்கம் செய்துகாட்டினர்.

## தேசியப் பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கோழியின உயர் கல்வி மையத்தில் "வணிகரீதியான கோழி வளர்ப்பில் காலநிலை, உயிர்ப் பாதுகாப்பு மற்றும் சுகாதார மேலாண்மை குறித்த ஒருங்கிணைந்த அணுகுமுறை" எனும் 21 நாள் தேசியப் பயிற்சி 29.01.2020 முதல் 18.02.2020 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் இந்திய

வேளாண் அறிவியல் நிலைய ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்களின் உதவிப் பேராசிரியர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### வேளாண் பல்கலைக்கழக நூலகர்களுக்கான தேசியப் பயிற்சி



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நூலகம் மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் தேசிய வேளாண் உயர் கல்வித் திட்ட நிதியுதவியுடன் வேளாண் பல்கலைக்கழக நூலகர்களுக்கான தேசியப் பயிற்சி, 18.02.2020 மற்றும் 19.02.2020ஆம் தேதிகளில் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் மக்தூம், மத்திய ஆடு ஆராய்ச்சி நிறுவன முன்னாள் இயக்குநர் முனைவர் தேவேந்திர ஸ்வரூப் அவர்கள் முதன்மை விருந்தினராகப் பங்கேற்றுப் பயிற்சியைத் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் பயிற்சிக் கையேடு வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. சரத்சந்திரா, தெலங்கானா, வாரங்கல் தேசியத் தொழில்நுட்பக் கழகத் தலைமை நூலகர் முனைவர் கே. வீராஞ்சநேயுலு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் தலைமையில் 19.02.2020அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர் கல்வித் திட்டத் தேசிய ஒருங்கிணைப்பாளர் முனைவர் ராம் பாபு சர்மா அவர்கள் பயிற்சிக் கையேட்டின் செறிவுவட்டை வெளியிட்டுப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வேளாண் பல்கலைக்கழக நூலகர்கள் 25 பேர் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். பல்கலைக்கழக நூலகர் முனைவர் ஜி. ரத்தினசபாபதி அவர்கள் பயிற்சியை ஒருங்கிணைத்தார்.

### பயிலரங்கு

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையக் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறை மூலம் “செல்லப்பிராணிகளில் ஏற்படும் இதயம் சார்ந்த நோய்கள்” பற்றிய ஒரு நாள் பயிலரங்கு, செல்லப்பிராணிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் 13 கால்நடை மருத்துவர்களுக்கு 26.02.2020அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள்



தலைமையுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

- மேற்குறித்த கல்லூரியின் கால்நடை நுண்ணுயிரியியல் துறையில் “கோழிகளில் ஏற்படும் நோய்களுக்கான மூலக்கூறு நோய் கண்டறிதல்” பற்றிய பயிலரங்கு, கெமின் இந்தியா நிறுவன நிதியுதவியுடன் 17.02.2020 முதல் 21.02.2020 வரை நடத்தப்பட்டது. மொத்தம் 15 கால்நடை மருத்துவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். 21.02.2020அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் தலைமை தாங்கி, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### குறுகிய காலப் பயிற்சி



“கால்நடை மற்றும் கோழிகளின் நீடித்த நலன் காக்க மேம்பட்ட நோய் நிகழ்வியல் நோயறிதலும் மற்றும் தடுப்பூசிகளும்” எனும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் குறுகிய காலப் பயிற்சி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை நோய்த் தடுப்பு மருந்தியல் துறையில் 17.02.2020 முதல் 26.02.2020 வரை நடைபெற்றது. 26.02.2020அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி உரையாற்றினார். பயிற்சியில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 13 பேர் பங்கேற்றனர்.

### மாதிரிப் பயிற்சி வகுப்பு

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை நோய்க்குறியியல் துறையானது புதுதில்லி, இந்திய அரசின் விரிவாக்க இயக்ககத்தின் நிதியுதவியுடன் “கால்நடைகளின் உடல் நலனை மேம்படுத்துவதற்காக எளிய முறையில் நோய்களைக் கண்டறியும் முறைகள்” பற்றிய மாதிரிப் பயிற்சி வகுப்பை

19.02.2020முதல் 26.02.2020 வரை நடத்தியது. பயிற்சியில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 20 பேர் பங்கேற்றனர். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் விரிவுரை வழங்கினார்.



## துணைவேந்தர் பங்கேற்பு

### ஆராய்ச்சி ஆலோசனைக் குழு

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பெங்களூரு, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசியக் கால்நடை நோய்த்தொற்றியல் மற்றும் தகவலியல் நிலையத்தில் 01.02.2020அன்று நடைபெற்ற ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் பங்கேற்றார்.

### ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக்

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் புதுதில்லி, ஷாதிபூரில் உள்ள ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக்கில் 12.02.2020 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அதன் குழு உறுப்பினராகப் பங்கேற்றார்.

### உயர்நிலைக் குழுக் கூட்டம்

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயிர்த் தொழில்நுட்பத் துறை 25.02.2020அன்று ஏற்பாடு செய்த உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்று, "கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம்" குறித்த திட்ட நீட்டிப்பின் முன்மொழிவை அத்திட்டத்தின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பாளர் என்ற வகையில் சமர்ப்பித்தார்.

## பாவேந்தர் பாரதிதாசன் பரிசு விழா



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் ஆறு கல்லூரி மாணவர்களுக்குப் பாவேந்தர் பாரதிதாசன் குறித்த கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு விழா 15.02.2020அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றிய தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னைத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள், பாவேந்தர் பாரதிதாசனின் கவித் திறன் மற்றும் சமூகப் பணிகளை எடுத்துரைத்தார். மேலும், போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். விழாவிற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா பல்கலைக்கழக மாணவர்களின் தமிழ் மொழி அறிவை வெளிக்கொணரும் நோக்கில் கொண்டாடப்படுகிறது என்றார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விழாவின் நிறைவாகச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பா. நாகராஜன் அவர்கள் நன்றி கூறினார்.

## பண்ணையாளர் பயிற்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கோழியின அறிவியல் துறைமூலம் காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தில் "கிராமப்புறக் கோழியின இடுபொருள்கள் மற்றும் செயல்திறன் மேம்பாட்டு மையம் நிறுவுதல்" எனும் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தொழில்முனைவோர்க்குக் "கோழி வளர்ப்பு, பதப்படுத்தல், கழிவு மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல்" எனும் பயிற்சி 27.01.2020 முதல் 31.01.2020 வரை நடத்தப்பட்டது. தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 54 தொழில்முனைவோர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

## ஆத்மா நிதியுதவிப் பயிற்சி



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை ஒட்டுண்ணியியல் துறைமூலம் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) நிதியுதவியுடன் "கால்நடை உற்பத்தி மற்றும் ஒட்டுண்ணி நோய்களின் முக்கியத்துவமும் அவற்றின் தடுப்பு முறையும்" பற்றிய பயிற்சி 06.02.2020 முதல் 14.02.2020 வரை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் பயிற்சி நிறைவு விழாவிற்கு தலைமை வகித்தார். தஞ்சாவூர் மாவட்ட வேளாண் துறையின் துணை இயக்குநர் திருமதி அ. கோமதிதங்கம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். ஒரத்தநாடு, வேளாண் துறையின் உதவி இயக்குநர் திரு. சு. செல்வராசு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பயிற்சியில் மொத்தம் 28 விவசாயிகள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### பண்ணையாளர் விழிப்புணர்வு முகாம்

- ❖ திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் "ஆடுகளில் ஏற்படும் நோயைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்" குறித்த பண்ணையாளர் விழிப்புணர்வு முகாம் 05.02.2020அன்று நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர் ராஜ் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழக மைய ஆய்வகப் பேராசிரியர் மற்றும் முதன்மை ஆராய்ச்சியாளர் முனைவர் டி.எம்.ஏ. செந்தில்குமார் அவர்கள் திட்ட மையப்பொருள்



குறித்து உரையாற்றினார். திருநெல்வேலி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் (பொ.) மருத்துவர் பி.டி.ஆர். தியோபிலஸ் ரோஜர், தூத்துக்குடி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் முனைவர் எஸ். சத்தியநாராயணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த 50 ஆட்டுப் பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

- ❖ திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கால்நடை மருத்துவம் சார்ந்த பழங்குடியினர் சார்புத் திட்டத்தின் கீழ் "ஆட்டுக்கொல்லி நோய்க்குத் தடுப்பூசி மற்றும் விழிப்புணர்வு" முகாம் திருநெல்வேலி மாவட்டம், தர்மதுரணி கிராமத்தில் 21.02.2020அன்று நடத்தப்பட்டது. திருநெல்வேலி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் (பொ.) மருத்துவர் பி.டி.ஆர். தியோபிலஸ் ரோஜர் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். தென்காசிப் பிரிவு, கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் மருத்துவர் எஸ். முருகையா அவர்கள் மடிப்பிதழ் வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். முகாமில் 500 ஆடுகளுக்கு ஆட்டுக்கொல்லி நோய்க்கு எதிராகத் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

### வெறிநோய்த் தடுப்பூசி முகாம்

- ★ சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைமூலம் "ஆண்டு வெறிநோய்த் தடுப்பூசி முகாம்" 20.02.2020அன்று கல்லூரியில் நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், பல்கலைக்கழகச் சிகிச்சையியல்



இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையில் முகாமைத் துவக்கிவைத்தார். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. சரத்சந்திரா அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றார். முகாமில் மொத்தம் 234 நாய்கள் மற்றும் பூனைகளுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டது

- ★ மாதவரம் பால்பண்ணை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் புறநகர் மருத்துவமனையில் 14.02.2020 அன்று "இலவச வெறிநோய்த் தடுப்பூசி முகாம்" நடத்தப்பட்டது. பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். முகாமில் 285 நாய்களுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது.

- ★ திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் தூத்துக்குடி, கால்நடைப் பராமரிப்புத் துறையும் திருநெல்வேலி ஸ்டார் ரோட்டரிச் சங்கமும் இணைந்து "வெறிநோய் விழிப்புணர்வு மற்றும் நாட்டின நாய்களுக்கு இலவச தடுப்பூசி அளித்தல் முகாமை", தூத்துக்குடி மாவட்டம் பண்ணம்பறை கிராமத்தில் 20.02.2020அன்று நடத்தின. கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். கால்நடைச் சிகிச்சை வளாகப் பேராசிரியர்மற்றும்தலைவர்முனைவர்ஆர்.ராம்பிரபு அவர்கள் வெறிநோய் விழிப்புணர்வுத் திட்டம் குறித்து விளக்கினார். பல்கலைக்கழக மருத்துவமனை மேலாண்மைக் குழு உறுப்பினர் திரு. ஆர். ரேமண்ட், தூத்துக்குடி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர்(பொ.) முனைவர் எஸ். சத்தியநாராயணன், திருச்செந்தூர் பிரிவு, கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் மருத்துவர் டி. செல்வகுமார், திருநெல்வேலி ஸ்டார் ரோட்டரிச் சங்கத் தலைவர் திரு. லியாகத், செயலாளர் திரு. ராஜ்பால், மண்டலம் 7 ஏஜி திரு. அயுப்கான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முகாமில் 112 நாட்டின நாய்களுக்கு வெறிநோய்த் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

### விருதுகள்

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஒட்டுண்ணியியல் துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியப் பிரதேச மாநிலம், ஜபல்புரில் 05.02.2020 முதல் 07.02.2020 வரை நடைபெற்ற 29ஆவது தேசியக் கால்நடை ஒட்டுண்ணியியல் மாநாட்டில் ஐந்து விருதுகள் மற்றும் பதக்கங்கள் வென்றனர். பேராசிரியர் முனைவர் நா. ஜெயதிலகன் மாநாட்டுச் சிறப்பு விருதும், உதவிப் பேராசிரியர்கள் முனைவர் ரா. ஈடீத் மற்றும் மருத்துவர் கா.தீ. கவிதா ஆகியோர் முறையே பிரதியும்னகுமார் மற்றும் பிரிதிராணி தாஸ் புதுமை முனைவர் பட்ட ஆராய்ச்சி விருது மற்றும் திருமதி சரஸ்வதி ஆனந்தன் சிறந்த முனைவர் பட்ட ஆராய்ச்சி விருதும், மருத்துவர் கௌரிசங்கர் மற்றும் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் பாஸ்கரன் ரவி லதா ஆகியோர் மருத்துவர் வி.எஸ். ஆழ்வார் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை விருதும், முதுநிலைப் பட்ட மாணவி நீலாக்ஷி தேக்கா இளம் அறிவியலாளர் விருதும் பெற்றனர்.

### மருந்து உற்பத்தியாளர்கள் சந்திப்பு – 2020

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைமூலம் இளநிலைப் பட்ட இறுதியாண்டு

(2015–16 சேர்க்கைப் பிரிவு) மாணவர்களுக்காக நான்காவது மருந்து உற்பத்தியாளர்கள் சந்திப்பு – 2020, 19.02.2020அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி அவர்கள் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் பாடத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும், மருந்தியல் வினாடிவினாப் போட்டி–2020இல்



வெற்றிபெற்ற மாணவர்களுக்கும் பரிசுகளை வழங்கினார். இச் சந்திப்பில் மொத்தம் 21 மருந்து உற்பத்தியாளர்கள் கலந்துகொண்டு தத்தம் பொருள்களைக் காட்சிக்கு வைத்தனர்.

## வெள்ளைச் சீருடை அளிக்கும் விழா



பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்ககம் மூலம் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளைச் சார்ந்த இளநிலைப் பட்ட நான்காம் ஆண்டு மாணவர்களுக்காகச் கால்நடைச் சிகிச்சையில் ஸ்டெதஸ்கோப் மற்றும் தொடு உணர்வு வலைத்தளக் கருத்தரங்கு மற்றும் வெள்ளைச் சீருடை அளிக்கும் விழா, காணொலிக் காட்சிமூலம் 17.02.2020அன்று சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலசந்திரன் அவர்கள் விழாவைத் துவக்கிவைத்து, நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு ஸ்டெதஸ்கோப் மற்றும் வெள்ளைச் சீருடை வழங்கித் தலைமையுரை ஆற்றினார். சென்னை மருத்துவக் கல்லூரியின் உள் மருத்துவ நிலைய இயக்குநர்(பொ.) பேராசிரியர் எஸ். ரகுநந்தனன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். விழா ஒருங்கிணைப்பாளர் மற்றும் பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் அ. பழனிசாமி ஆகியோர் தத்தம் கல்லூரிகள் சார்பில் விழாவில் பங்கேற்றனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பா. நாகராஜன் அவர்கள் நன்றி கூறினார். விழாவில் பல்கலைக்கழகத்தின் நான்கு கால்நடை மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த 337 இளநிலைப் பட்ட மாணவர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர் .

## கல்லூரிகளுக்கு இடையேயான சதுரங்கப் போட்டி

பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளுக்கு இடையேயான ஆடவர் மற்றும் மகளிர் சதுரங்கப் போட்டி 12.02.2020அன்று நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. போட்டியை நாமக்கல் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.கே.அனந்தநாராயணன் அவர்கள் துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் பா.மோகன் அவர்கள் தலைமை வகித்தார். போட்டியில் நாமக்கல், சென்னை, ஒரத்தநாடு, கோடுவெளி மற்றும் திருநெல்வேலியில் உள்ள பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைச் சார்ந்த 50 மாணவர்கள் பங்கேற்றனர். நாமக்கல் மற்றும் திருநெல்வேலி கல்லூரிகள் முறையே முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்தன. கல்லூரி முதல்வர் முனைவர் பா.மோகன் அவர்கள் வெற்றிபெற்றவர்களுக்குச் சான்றிதழ், பதக்கம் மற்றும் கேடயங்களை வழங்கினார்.

## செயல்வழிக் கற்றல் பயிற்சி

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் 2017–2018ஆம் சேர்க்கைப் பிரிவைச் சார்ந்த மாணவர்கள், சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையில் கொட்டிலில் ‘இறைச்சிக் கோழி வளர்ப்பு’ குறித்த செயல்வழிக் கற்றல் பயிற்சியை 2019–2020ஆம் கல்வியாண்டில் நிறைவு செய்தனர். மாணவர்களுக்குப் பயிற்சியில் கிடைத்த பங்குத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் 03.02.2020அன்று வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன், கல்லூரியின் கோழியின அறிவியல் துறை மற்றும் கல்விச் சிறப்புப் பிரிவைச் சார்ந்த ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

## புத்தகக் காட்சி

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் 25.02.2020அன்று புத்தகக் காட்சி நடத்தப்பட்டது. புத்தகக் காட்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் தி. சிவகுமார் அவர்கள் துவக்கிவைத்தார். ஆறு புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் புத்தகக் காட்சியில் பங்கேற்றனர். மொத்தம் 4 ஆயிரம் புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

## பணி ஓய்வு / விருப்பப் பணி ஓய்வு



கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் உணவுப் பதப்படுத்தல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் த. இராமசாமி அவர்கள் 29.02.2020அன்று பணி ஓய்வு பெற்றார். 16.02.1960இல் பிறந்த இவர், 36 ஆண்டும் 06 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம்.ஜி. ஜெயதங்கராஜ் அவர்கள் 29.02.2020அன்று பணி ஓய்வு பெற்றார். 11.02.1960இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருந்தியல் மற்றும் நச்சியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி. ஸ்ரீராம் அவர்கள் 29.02.2020அன்று பணி ஓய்வு பெற்றார். 28.02.1960இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/05254
Date of publication : 25th and 26th of every month

பெறுநர்

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் இரவி சுந்தர் ஜார்ஜ் அவர்கள் 03.06.2019அன்று விருப்பப் பணி ஓய்வு பெற்றார். 30.07.1960இல் பிறந்த இவர், 30 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி. ஸ்ரீதேவி அவர்கள் 31.10.2019அன்று விருப்பப் பணி ஓய்வு பெற்றார். 13.01.1967இல் பிறந்த இவர், 30 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்கக நிர்வாக அலுவலர் திருமதி எம். சாமுண்டீஸ்வரி அவர்கள் 29.02.2020அன்று பணி ஓய்வு பெற்றார். 01.03.1962இல் பிறந்த இவர், 29ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் அலுவலகத்தின் நிர்வாக அலுவலர் திரு. கே. மோகன் குமார் அவர்கள் 29.02.2020அன்று பணி ஓய்வு பெற்றார். 23.02.1962இல் பிறந்த இவர், 35ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.




சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, மாணவர் விடுதியின் உதவிக் கணக்கு அலுவலர் திரு. டி. ஹரிகிருஷ்ணன் அவர்கள் 29.02.2020அன்று பணி ஓய்வு பெற்றார். 25.02.1962இல் பிறந்த இவர், 27ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் மின் மேற்பார்வையாளர் திரு. நாராயணசாமி அவர்கள் 29.02.2020அன்று பணி ஓய்வு பெற்றார். 09.02.1962இல் பிறந்த இவர், 31ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



மாதவரம் பால்பண்ணை, பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலக ஓட்டுநர் திரு. இ. இராமசந்திரன் அவர்கள் 29.02.2020அன்று பணி ஓய்வு பெற்றார். 05.02.1962இல் பிறந்த இவர், 26ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



மாதவரம் பால்பண்ணை, பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளர் திரு. எஸ். பாலசுந்தரம் அவர்கள் 29.02.2020அன்று பணி ஓய்வு பெற்றார். 04.02.1962இல் பிறந்த இவர், 06 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலச்சந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
முனைவர் கா.தீ. கவிதா